**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.224/2022**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 12.07.2023**

| | |
|---|---|
| **Name : ராஜா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் TMP நகர் குடியிருந்து பிளாஸ்டிக் வேலை செய்துவருகிறேன். விபத்தில் இறந்துபோனவர் போலீஸ்காரர் மகன் சுஜீத் ஆவார். கடந்த 2020-ம் வருடம் காலை 9 மணிக்கு கருமலைக்கூடல் இருந்து டாடா ஏசி என்ற வாகத்தில் நான் மற்றும் ஓட்டுனர் குணசேகர் மற்றும் கணேசன் ஆகியோர் முன்னால் அமர்ந்து சென்றோம். வாகனத்தை ஆஜர் எதிரி குணசேகரன் ஓட்டிச்சென்றார். வாகனம் மேட்டூர் நோக்கி சென்று கொண்டிருந்த சமயத்தில் டவுண்டானா பகுதியில் காட்டுரோட்டில் மலைப்பாதையில் 2 வது மயிலில் சென்ற போது விபத்து நடந்தது.

2. விபத்து நடந்தபோது நான் இடது பக்கமாக ஓட்டுனர் இருக்கைக்கு அருகில் உட்கார்ந்திருந்தபோது விபத்து நடந்தவுடன் மயக்கம் ஆகிவிட்டதால்என்ன நடந்தது என்று தெரியவில்லை. விபத்தின் காரணமாக கழுத்து பகுதியில் மற்றும் வலது பக்க காலில் காயம் ஏற்பட்டது. உடன் அமர்ந்து வந்த கணேசன் என்பவருக்கு மூக்க வாய் கன்னம் ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டது. ஓட்டுனருக்கு வலது பக்க காலில் காயம் எற்பட்டது. காயம் அடைந்த நாங்கள் மேட்டூர் அரசு மருத்துமனையில் சென்று சேர்ந்தோம்.

3. காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான்

நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும்.போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

4. நான் எழுதாத வெள்ளை பேப்பரில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். ஆட்டோவில் வந்த சமயத்தில் நின்றுகொண்டிருந்தபோது விபத்து நடந்தது என்றால் சரிதான். இந்த விபத்து எதிரியின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்க வில்லை என்றால் சரிதான். எதிரே வந்த வாகனம் மோதித்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.224/2022**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 12.07.2023**

| | |
|---|---|
| **Name : கணேசன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கருமலைக்கூடல் குடியிருந்து வெல்டிங் வேலை செய்துவருகிறேன். கடந்த 2020-ம் வருடம் காலை 9 மணிக்கு கருமலைக்கூடல் இருந்து டாடா ஏசி என்ற வாகத்தில் நான் மற்றும் ஓட்டுனர் ஆஜர் எதிரி குணசேகர் மற்றும் அ.சா.1 ஆகியோர் முன்னால் அமர்ந்து சென்றோம். வாகனத்தை ஆஜர் எதிரி குணசேகரன் ஓட்டிச்சென்றார். வாகனம் மேட்டூர் நோக்கி சென்று கொண்டிருந்த சமயத்தில் காட்டுரோட்டில் ஆட்டோவை ஓட்டிவந்த ஆஜர் எதிரி ஓரமாக நிறுத்திய சமயத்தில் எதிரே இருசக்கரத்தில் வந்த நபர் எங்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டது.

2. விபத்து நடந்தபோது அ.சா.1 க்கு கழுத்து பகுதியில் மற்றும் வலது பக்க காலில் காயம் ஏற்பட்டது. எனக்கு மூக்கு வாய், கன்னம் ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரிக்கு வலது காலில் ஓட்டுனருக்கு வலது பக்க காலில் காயம் எற்பட்டது. காயம் அடைந்த நாங்கள் மேட்டூர் அரசு மருத்துமனையில் சென்று சேர்ந்தோம்.யாருடைய தவறால் விபத்து நடந்தது என்றால் எதிரே இருசக்கர வாகனத்தில் வந்த நபருடைய தவறால் விபத்து நடந்தது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—</u>**

4. விபத்து எதிரியினுடைய கவனக்குறைவால் நடைபெறவில்லை என்றால் சரிதான். எதிரே இருசக்கர வாகனம் வருவதை பார்த்த ஓட்டுனர் ஓரமாக நிறுத்திவிட்டார் என்றால் சரிதான் ஆட்டோவில் வந்த சமயத்தில் நின்றுகொண்டிருந்தபோது விபத்து நடந்தது என்றால் சரிதான். இருசக்கர வாகனம் ஒட்டிவந்த நபருடைய தவறால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரே வந்த வாகனம் மோதியதால் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்க வில்லை என்றால் சரிதான். எதிரே வந்த வாகனம் மோதித்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/—தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.224/2022**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 12.07.2023**

| | |
|---|---|
| **Name : நவீன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சாம்பல்லியூர் குடியிருந்து ஊட்டியில் காட்டேஜ் வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 2020-ம் வருடம் காலை 8.30 மணிக்கு மேட்டூரிலிருந்து சாம்பல்லி நோக்கி இருசக்கர வாகனத்தில் நான் மற்றம் எனது நண்பர் சுகிரலேஷ் இருவரும் சென்ற சமயத்தில் விபத்து நடந்தது. இருசக்கர வாக த்தை சுகிரலேஷ் என்பவர் ஒட்டிவந்தார். நாங்கள் இருவரும் காட்டுபாதையில் இரண்டாவது கருவாட்டு கடை அருகே சென்ற போது சின்ன யாணை ஆட்டோ சாம்பல்லியிருந்து வந்தபோது எங்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்திற்கு பிறகு நான் மயக்க நிலையில் சென்றதால் பிறகு என்ன நடந்தது என்பது எனக்கு தெரியாது.

2. யாருடைய தவறால் விபத்து நடந்தது என்றால் எனக்கு தெரியாது விபத்தின் காரணமாக எனது வலது பக்க கை முழுவதும் இரத்தகாயம் ஏற்பட்டது. வலது காலில் காயம் ஏற்பட்டது. எனது வலது பக்க உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது. நான் சேலம் குறிஞ்சி மருத்துவமனைக்கு சென்று 4 மாதம் சிகிச்சை பெற்றேன். இருசக்கர வாக த்தை ஓட்டிவந்த சுகிரலேஷ் என்பவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். நான் மயக்க

அடைந்ததால் ஆட்டோ ஓட்டுனரை நான் பார்க்க வில்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—</u>

3. விபத்து எவ்வாறு நடந்தது என்பது எனக்கு தெரியாது. எதிரியினுடைய கவனக்குறைவால் நடைபெறவில்லை என்றால் எனக்கு தெரியாது, இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரே வந்த வாகனம் மோதியதால் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்க வில்லை என்றால் சரிதான். எதிரே வந்த வாகனம் மோதித்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/—தே.மயில்சாமி,

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**மேட்டுர்.**